Executive Subordinates of Fisheries Department

*719 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Fisheries Executive Subordinate Association has presented a Memorandum containing their demands on 5th October 1974 ;

(*b*) if so, what those demands are ; and

(*c*) the action taken thereon by the Government?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : (அ) இல்லை

(இ) & (உ) இக்கேள்விக்கு இடமில்லை.

Ferro-Cement boats

*720 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Government propose to build fishing boats with Ferro-Cement ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : (அ) ஆம்.

(இ) மீனளத்துறையின் இரும்பு சிமிட்டிப் படகு ஆராய்ச்சி நிலையம் ஏற்கனவே 38 அடி படகு ஒன்றையும் 15 அடி படகு ஒன்றையும் கட்டி முடித்துள்ளது. 38 அடி நீளமுள்ள இன்னும் 10 படகுகளைக் கட்டும் பணி பல்வேறு நிலையில் நடைபெற்று வருகின்றது. 31, 32 அடி இரும்பு சிமிட்டி படகு கட்டும் திட்டம் அரசின் கருத்தில் உள்ளது.

THIRU B. VENKATASWAMY : Sir, I am given to understand that the best and cheapest boats can be built with Ferro-Cement. So may I know from the Hon. Minister whether more boats will be built with Ferro-Cement?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, நான் சிறிது விளக்கமாக அவர்களுக்குச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இந்த ‘பர்ரோ சிமெண்ட்’ படகு கட்டுவது ஆசியா கண்டத்திலேயே இரண்டாவதாக நாம் தான் கட்ட ஆரம்பித்து இருக்கிறோம். இதைக் கட்டுவதற்கு செலவும் சிக்கனம். அதே நேரத்தில் கடலில் செலுத்துவதற்கு, செலுத்து கிற நேரத்திலே தீப்பிடித்து பாதகம் ஏற்படாத வகையில்

விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்படுகிறது. நம்முடைய இந்தியாவிலேயே, தமிழகத்திலேதான் முதன் முதலாக நம்முடைய மீனளத்துறையின் மூலம் கட்டப்படுகிறது. இப்போது 10 படகுகள் கட்டுவதற்கு எடுத்துக் கொண்டு, 31-32 இரண்டு படகுகளைக் கட்டவும் இப்போது ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். அது மட்டுமல்லாமல், கன்னியாகுமரி மாவட்டத்தில் சோஷியல் வெல்பேர் சொசைடி மூலமாக கட்டப்பட இருக்கிற 57 அடி நீளமுள்ள படகுகளைக் கட்டவும் ஒப்பந்தம் மேற்கொண்டு இருக்கிறோம். அந்தத் திட்டம் ஒரு முன்மாதிரியான திட்டம் மாத்திரமல்ல. மிகச் சிறந்த திட்டம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

Timber Depots

*739 *Q*.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state :

(*a*) the number of Government Depots for stocking forest timber in the State as on this date ;

(*b*) whether there is any proposal to open additional depots ; and

(*c*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ), (இ) & (உ)— ஏழு இடங்களில் திறக்கப்பட்டு இருக்கின்றன. மேலும் திறக்கும் செயற்குறிப்பு இல்லை.

திரு. என். மருதாசலம் : ஏழு இடங்களில் திறக்கப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள், எந்தெந்த இடங்களில் திறக்கப்பட்டு இருக்கின்றது ? கோவையில் பல மரக்கடைகள் இருக்கின்றன. கோவை மாவட்டத்தில் மரக்கடைகள் மேலும் திறக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தமிழ்நாட்டில் திறக்கப்பட்டுள்ள ஏழு இடங்களில், கோவை மாவட்டத்தில் மட்டும் மூன்று இடங்களில் திறக்கப்பட்டு இருக்கின்றன. பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம், இருட்டுப்பள்ளம்.

சந்தன மரங்கள்

* 740 வினு—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

1973–74 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டிலிருந்து கள்ளக் கடத்தல் செய்யப்பட்ட சந்தன மரங்கள் எவ்வளவு ? அதன் மதிப்பு எவ்வளவு ?